## 29.8 ஊராட்சி உதவியாளர்/பகுதி நேர எழுத்தர்/பகுதி நேர பணியாளர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதியத்தை உயர்த்துதல்.

ஊரக வளர்ச்சி (இ5) துறை

அரசாணை (2 D) எண். 148 நாள் : 9.7.1999

படிக்க :

1. அரசாணை (நிலை) எண். 86, ஊ.வ. (இ5) துறை, நாள் 8.5.98.
2. அரசாணை (நிலை) எண். 182, ஊ.வ. (இ5) துறை, நாள் 31.8.98.
3. ஊரக வளர்ச்சி இயக்குநரின் எண். 27094/ஈ1, 22.4.99 நாளிட்ட கடிதம்.
4. அரசாணை (நிலை) எண். 122, ஊ.வ. (இ5) துறை, நாள் 6.7.99.

**ஆணை**

கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் மதிப்பு ஊதியம் / தொகுப்பு ஊதியம் பெறும் பணியாளர்களின் ஊராட்சி உதவியாளர், பகுதி நேர எழுத்தர், சுகாதாரப் பணியாளர்கள், விசைப்பம்பு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் ஆகியோர்களுக்கு படிக்கப்பட்டவை ஒன்று மற்றும் இரண்டு குறிப்பிட்டுள்ள அரசாணையில் ஊதியத்தை உயர்த்தி நிர்ணயித்து ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. மேற்குறிப்பிட்ட பணியாளர்கள், ஊதியத்தை மிகவும் கூடுதலான அளவில் உயர்த்தக் கேட்டுக்கொண்டுள்ளனர். இவர்கள் கோரும் அளவுக்கு ஊதியத்தை உயர்த்துவது ஊராட்சியின் நிதிநிலையை கருத்தில் கொண்டு சாத்தியமானதல்ல. மேலும் இப்பணியாளர்களின் ஊதியத்தை உயர்த்தி ஓராண்டு காலமே கடந்துள்ளது. இவைகளைக் கருத்தில் கொண்டு ஊராட்சி பணிகளை செம்மையாக செயல்படுத்தவும், ஊரக வளர்ச்சி இயக்குநர் படிக்கப்பட்டவை மூன்றில் காணும் கடிதத்தில் இப்பணியாளர்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ளவாறு ஊதிய உயர்வு அளிக்கலாம் என பரிந்துரை செய்துள்ளார்.

அ) ஊராட்சிகளில் உள்ள ஊராட்சி உதவியாளர்களுக்கு தற்பொழுது ரூ.750/– மதிப்பு ஊதியம் வழங்கப்படுவதை ரூ.800/– ஆக உயர்த்தலாம்.

ஆ) கிராம ஊராட்சி பகுதிநேர எழுத்தர்களுக்கு தொடர்புடைய ஊராட்சிகளின் மக்கள் தொகையின் அடிப்படையில் தற்பொழுது வழங்கப்படும் ஊதியத்தைவிட கூடுதலாக ரூ.50/– கீழ்க்கண்டவாறு வழங்கலாம்.

| ஊராட்சிகளின் மக்கள் தொகை | தற்பொழுது வழங்கப்படும் மதிப்பூதியம் (ரூபாய்) | பரிந்துரைக்கப்பட்ட ஊதியம் (ரூபாய்) |
|---|---|---|
| 2000 மற்றும் அதற்கு குறைவு | 450 | 500 |
| 2001 முதல் 3000 வரை | 500 | 550 |
| 3001 முதல் 4000 வரை | 550 | 600 |
| 4001 முதல் 5000 வரை | 600 | 650 |
| 5001 –ஐ விடக் கூடுதல் | 650 | 700 |

இ) ஊராட்சி / பகுதிநேரப் பணியாளர்களான சுகாதார / துப்புரவு பணியாளர்கள் விசைப்பம்பு / மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் ஆகியோர்களுக்கு தற்பொழுது ரூ.300/– தொகுப்பு ஊதியம் வழங்கப்படுவதை ரூ.350/– ஆக உயர்த்தலாம்.

3. ஊரக வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையை ஏற்று அரசு கீழ்க்கண்டவாறு ஆணையிடுகின்றது.

அ) நிலை 2 கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் ஊராட்சி உதவியாளர்களுக்கு மதிப்பூதியம் ரூ.750/– ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ளதை ரூ.800/– ஆக உயர்த்தப்படுகின்றது.

ஆ) இதர நிலை 2 கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் பகுதிநேர எழுத்தர்களுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் மதிப்பு ஊதியத்தை விட கூடுதலாக ரூ.50/– அந்தந்த ஊராட்சிகளின் மக்கள் தொகையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்க அனுமதிக்கப்படுகின்றது.

| ஊராட்சிகளின் மக்கள் தொகை | ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட மதிப்பு ஊதிய வரம்பு (ரூபாய்) | தற்பொழுது நிர்ணயிக்கப்படும் மதிப்பூதியம் (ரூபாய்) |
|---|---|---|
| 2000 மற்றும் அதற்கு குறைவு | 450 | 500 |
| 2001 முதல் 3000 வரை | 500 | 550 |
| 3001 முதல் 4000 வரை | 550 | 600 |
| 4001 முதல் 5000 வரை | 600 | 650 |
| 5001–ஐ விடக் கூடுதல் | 650 | 700 |

இ) ஊராட்சி பகுதிநேர பணியாளர்களான சுகாதார / துப்புரவு பணியாளர்கள் விசைபம்பு / மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் ஆகியோர்களுக்கு தற்பொழுது ரூ.300/– தொகுப்பு ஊதியம் வழங்கப்படுவது ரூ.350/– ஆக உயர்த்தப்படுகிறது.

4. இதற்காக ஏற்படும் செலவை அந்தந்த கிராம ஊராட்சி நிதியிலிருந்தே ஏற்கப்பட வேண்டும்.

5. ரூபாய் 3.00 இலட்சத்திற்கு கூடுதலாக சொந்த வருவாய் ஆதாரம் உள்ள நிலை 1 கிராம ஊராட்சிகளில் உள்ள ஊராட்சி உதவியாளர் / பகுதிநேர எழுத்தர்களை அந்தந்த ஊராட்சியில் முழுநேர ஊராட்சி எழுத்தர்களாக தொகுப்பு ஊதிய அடிப்படையில் நியமிக்க படிக்கப்பட்டவை நான்கில் குறிப்பிட்டுள்ள அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது. இவர்களுக்கு ஊதியம் நிர்ணயம் செய்து அரசு தனியாக ஆணைகள் பின்னர் வெளியிடும்.

6. இந்த அரசாணையின் படிகளை (copies) அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் உடனே அனுப்புமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக) கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

7. இந்த அரசாணை நிதித்துறையின் 2320/FS/P/99 எண் 24.6.99 நாள் இட்ட அலுவல் சாரா்பற்ற குறிப்பில் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
செயலாளர்